**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பண்ருட்டி.**

**முதலேற்பு வழக்கு எண். 109/2016**

**2026 ம் ஆண்டு ஜூலை-20 ம் நாள் திங்கள்கிழமை**

| | |
|---|---|
| பெயர் | : குமாரசாமி |
| சாட்சி | : (PW2) |
| தந்தை பெயர் | : கலியபெருமாள் |
| நேரம் | : 11.43AM to 12.05 PM |

**3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நான் சொத்து சம்மந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வந்ததா என்றால் எனக்கு வரவில்லை. யார் யார் யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். ஆறுமுகம், அன்பரசன், தமிழ்மாறன் வாதிகள் ஆவார். விஜயா , பரசுராமன் , ஏழுமலை ஆகியோர் பிரதிவாதிகள் ஆவார். வாதி ஆறுமுகம் என்னுடைய சொந்த சித்தப்பா ஆவார். வாதி ஆறுமுகமும் என்னுடைய தந்தையும் சுமார் 45 வருடத்திற்கு முன்னர் பாக பிரிவினை செய்து கொண்டார்கள். நான் கடந்த 05.02.1989 பிறந்தேன். எனது சித்தப்பா ஆறுமுகமும் எனது தந்தையும் பாகம் செய்து கொண்ட விவரம் எனக்கு நேரிடையாக தெரியாது. வா.சாஆ.3 பரிவர்த்தனை ஆவணம் யார் யாருக்கிடையே ஏற்பட்டது என்றால் நான் ,எனது மூத்த சகோதரர் குமரவேல் , எனது சித்தப்பா ஆறுமுகம், எனது சித்தப்பா மகன் அன்பழகன், எனது சித்தப்பாவின் பேரக்குழந்தைகள் அன்பரசு மற்றும் தமிழ்மாறன் ஆகியோர்களுக்கிடையே பரிவர்த்தனை ஏற்பட்டது.

2. பரிவர்த்தனை ஆவணம் ஏற்படுத்தும்போது சொத்தை அளந்து பார்த்து வாங்கப்பட்டதா என்றால் அனைத்து சொத்தும் அளந்து பார்த்து தான் பரிவர்த்தனை ஆவணம் ஏற்படுத்தப்பட்டது. வாதி இரண்டு அயிட்ட சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். பரிவர்த்தனை ஆவணம் ஏற்படுத்துவதற்கு முன்பாக வில்லங்கம் பார்க்கப்பட்டதா என்றால் எங்களுடைய சொத்திற்கு நாங்கள் வில்லங்கம் எடுத்து கொடுத்தோம். எனது சித்தப்பாவின் சொத்திற்கு அவர் வில்லங்ம் எடுத்து கொடுத்தார். வில்லங்க சான்றிதழை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா

என்றால் எனது சித்தப்பாவை தான் கேட்க வேண்டும். நான் சொல்வது போல் சொத்தை அளந்து பார்க்க வில்லை. வில்லங்க சான்றிதழையும் பார்க்க வில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் 50 ஏர்ஸ் ஆகும். பரிவர்த்தனை ஆவணம் தவறுதலாக ஏற்படுத்தபட்ட ஆவணம் என்றால் சரியல்ல. சார்பு பதிவாளர் அலுவலகத்தில் சரியாக பதிவு செய்யப்பட்ட ஆவணம் ஆகும்.

3. பரிவர்த்தனை ஆவணம்ஏற்படுத்துவதற்கு உரிமை உள்ளதை காண்பிக்க ஆவணம் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்னிடம் ஆவணம் உள்ளது. பரிவர்த்தனை ஆவணத்தில் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றாலும், பரிவர்த்தனை ஆவணத்தின் படி நாங்கள் அனுபவத்தில் உள்ளோம் என்றால் சரியல்ல. அனுபவத்தில் தான் உள்ளோம். கடந்த 21.03.2017 தேதியில் மூன்றாம் பிரதிவாதி ஏழுமலை என்பவரிடமிருந்து கிரையம் பெற்று தற்போது அவர்தான் அனுபவத்தில் உள்ளார் என்றால் சரியல்ல. பரசுராமன் என்பவர் வெளிநாட்டில் உள்ளார். பரசுராமன் எவ்வளவு அளவுகளுக்கு சொத்தில் உரிமை கோருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது. 1ம் வாதி எனது சித்தப்பா என்பதாலும் அவர் கேட்டு கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக நான் தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கு எதிராக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மூன்றாம் பிரதிவாதி எவ்வளவு சொத்திற்கு உரிமை கோருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

**மறு விசாரணை இல்லை.**

**குறுக்கு விசாணை இத்துடன் முடிக்கப்பட்டது.**